Sri Hari:

**GURUJI SRI MURALIDHARA SWAMIGAL MISSION (Regd.)**

Admin. Office: No.51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 600 083.
Phone : 044-24895875 e-mail : contact@madhuramurali.org



உலகமோ தெய்வாதீனமானது. அந்த தெய்வமோ மந்திரத்திற்கு வசப்படக் கூடியது. அந்த மந்திரத்தை தன்னிடத்தே கொண்ட பிராம்மணர்கள்தான் பிரத்யக்ஷ மான தெய்வம் என்ற ஸ்லோகம் பிரஸித்தியானது.

**தைவாதீனம் ஜகத் ஸர்வம் மந்த்ராதீநம் து தைவதம் தந்மந்த்ரம் ப்ராஹ்மணாதீநம் ப்ராஹ்மணோ மம தைவதா:**

மனிதர்களாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் தெய்வ அனுக்ரஹத்தைப் பெறவேண்டும் என்ற ஆசையுள்ளது. தெய்வ அனுக்ரஹம் இல்லாமல் சாந்தியும் ஏற்படாது. இஹ லோக வாழ்க்கையும் ஸோபிக்காது. மந்திரங்களின் மஹத்வம் அநிர்வசனீயமானது.

ஸமீபகாலத்தில் வாழ்ந்த காவ்ய கண்ட கணபதி முனி என்பவர் மிகச்சிறந்த மந்திரேஸ்வரர். ஜோதிஷத்தில் பிரஸித்தியாக விளங்கிய ஆனந்த தாண்டவபுரம் ஜோதிஷரும் மந்திர சாஸ்திரத்தில் நல்ல பரிச்சயம் உடையவர்களாக இருந்துள்ளனர்.

தாகத்தைக் கொடுத்த பகவான் தண்ணீரையும் கொடுத்துள்ளான். இன்னும் சொல்லப்போனால் தண்ணீரைப் படைத்துவிட்டுத்தான் தாகத்தை உண்டு பண்ணினான் என்றால் அது மிகையாகாது. நமக்கு பிராப்த வசமாக துன்பங்களைத் தருவதற்கு முன்பாகவே பகவான் மந்திரங்களைத் தந்துள்ளான். அந்த மந்திரங்களை ஜபம் செய்தால், இறந்தவரையும் பிழைக்க வைக்கலாம்.

அகத்தியர் கடலை ஆசமனம் செய்ததும், விஸ்வாமித்திரர் திரிசங்குவிற்கு ஸ்வர்கத்தை உண்டு பண்ணியதும் காயத்ரீ மந்திரத்தின் ப்ரபாவத்தினால்தான். மந்திரங்களால் சாதிக்க முடியாததே இல்லை. ஆனால், அவற்றை விதிப்படி செய்யவேண்டும்,

ஸ்ரீ ஆதிசங்கரரும் பிரபஞ்ச ஸாரத்தில் எவ்வளவோ மந்திரங்கள், அதன் பெருமைகள், அதை ஜபிக்கும் முறைகளையும் விஸ்தாரமாகச் சொல்லியுள்ளார். அவர் அருளிய ஸௌந்தர்யலஹரியை தேதீயூர் சாஸ்திரிகள் அதில் உள்ள மந்திரங்களின் மஹிமையை எடுத்து ப்ரகாஸப்படுத்தியுள்ளார். பாஸ்கரராயர், முத்துஸ்வாமி தீக்ஷிதர், ஸ்யாமா ஸாஸ்த்ரிகள் போன்றவர்கள் ஸ்ரீவித்யா மந்திர பிரகரத்தினால் தேவியை வசப்படுத்தியவர்கள்.

மந்திரங்களின் ப்ரயோகமும், பெருமையும் பலராலும் எழுதப்பட்டிருந்தாலும் அதனுடைய ஒவ்வொரு அங்கத்தையும் அழகாக எடுத்து, எப்படி செய்யவேண்டும்.

உதாரணமாக குரு கிடைக்கவில்லை என்றால் எப்படி எடுத்துக்கொள்ள வேண்டும். உசிதமான மாதம், திதி, ஜாதகரீதியான நாட்கள் போன்ற நுணுக்கமான விஷயங்களை எல்லோருக்கும் புரியும்படி நம்முடைய நன்னிலம் ராஜு கணபாடிகளால்தான் தரமுடியும்,.

மந்திரத்தை தக்ஷிணாமூர்த்தி அல்லது லக்ஷ்மீ நரஸிம்மர் ஸன்னதியில் எடுத்துக்கொள்ளலாம் என்பதைப் படிக்கும்போது, பெரிய பெரியவாள் அப்படி ஸ்வீகரித்துக்கொண்டது நினைவிற்கு வருகின்றது.

இவர், வைதீகஸ்ரீ என்ற மாதப்பத்திரிக்கையை நடத்துவதோடு தன் பணி முடிந்தது என்றில்லாமல், ஆஸ்தீக உலகிற்கு அபூர்வமான நூல்களையும் தந்து ஸேவையாற்றுகின்றார்.

கணபாடிகள் குடும்பமும், இதை வாங்கி ஆதரித்தும், அனுபவத்தில் கண்டும் பயனடையும் எல்லோருக்கும் ஸ்ரேயஸ் ஏற்பட ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மாவின் சரணங்களைப் பிரார்த்திக்கின்றேன்.

**யுகள த்யானத்துடன்**

**சென்னை**

**10.03.2008**

**முரளீதர ஸ்வாமிஜீ**